<u>**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**</u>

**முன்னிலை:**–திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 5ம் நாள்
2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 19ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2022**</u>
<u>**CNR No. TNED13-000055-2022**</u>

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
மலையம்பாளையம் காவல் நிலையம்,
(குற்ற எண்.369/2020) – குற்ற முறையீட்டாளர்

//எதிராக//

1. பொன்னுசாமி, வயது 67/2020, த/பெ.நல்லப்ப கவுண்டர்,
50 உத்தாண்டிபாளையம், ஈரோடு மாவட்டம். (இறந்துவிட்டார்)

2. கஸ்தூரி, வயது 56/2020, க/பெ.பொன்னுசாமி,
50 உத்தாண்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.

3. தனவேல், வயது 41/2020, த/பெ.பொன்னுசாமி,
50 உத்தாண்டிபாளையம், புஞ்கை களமங்கலம்,
ஈரோடு மாவட்டம். – எதிரிகள்

**(வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1ம் எதிரி இறந்துவிட்டதால் 1ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டது)**

| **வரிசை எண்** | **விளக்கம்** | **விவரங்கள்** | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 09.09.2020 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 09.09.2020 | |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | – இல்லை – | மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.19 11:13:23 +0530

<table>
<tr><td></td><td></td><td></td><td>மற்றும் அமர்வு நீதிமன்ற Crl MP No1643/2020 உத்தரவின் பேரில் 2, 3 எதிரிகள் முன்ஜாமினில் சென்ற நாள் 07.11.2020<br>1ம் எதிரி 02.08.2021</td></tr>
<tr><td>4.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">12.11.2021</td></tr>
<tr><td>5.</td><td>குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="2">15.03.2022</td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="2">1. மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.பிரிவு 438ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு Crl.M.P. No.1643/2020 உத்தரவு நாள் 07.10.2020 – அனுமதிக்கப்பட்டது.<br>2. 2,3 எதிரிகள் சரண்டர் மனு சி.எம்.பி.எண்.1119/2020 உத்தரவு நாள் 07.11.2020 – அனுமதிக்கப்பட்டது<br>3. 1ம் எதிரி நீதிமன்றத்தில் சரண்டர் ஆவதற்கு கால நீட்டிப்பு கோரி தாக்கல் செய்த கு.வி.மு.ச.பிரிவு 438ன் கீழான மனு Crl.M.P.No.1151/2021 உத்தரவு நாள் 09.07.2021 – அனுமதிக்கப்பட்டது.<br>4. 1ம் எதிரி சரண்டர் மனு சி.எம்.பி.எண்.1464/2021 உத்தரவு நாள் 02.08.2021 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td colspan="2"><table>
<tr><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>19.11.2025</td><td>19.11.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>27.11.2025</td><td>27.11.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>12.02.2026</td><td>12.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>19.05.2026</td><td>19.05.2026</td></tr>
</table></td></tr>
</table>

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:13:39 +0530

<table>
<tr><td>8.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="2">08.06.2026</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரிகள்மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td>பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td>– இல்லை –</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="2">08.06.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="2">19.06.2026</td></tr>
</table>

இவ்வழக்கு 01.02.2022ம் தேதி சி.சி.எண்.1/2022 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, வழக்கு இறுதியாக 08.06.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I அவர்களும், 2, 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுரேஷ்குமார் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆகும்.

1. **மலையம்பாளையம் காவல் உதவி ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-**

வாதி ஆறுமுகத்திற்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்த நிலையில் 09.09.2020ம் தேதி காலை 09.00 மணிக்கு மலையம்பாளையம் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட வாதி ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான குமாரசாமிபுரம் தோட்டத்தில் வாதி ஆறுமுகம் சாட்சி 4 கௌரிசங்கர் என்பவருடன் டிராக்டரில் உழவு ஓட்டச் சென்றபோது 1 முதல் 3 எதிரிகள் உழவு ஓட்ட விடாமல் சட்ட விரோதமாக தடுத்து வாதியை பார்த்து ஏன்டா தாயோலி என்று கெட்ட

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:13:43 +0530

வார்த்தையால் மாறி மாறி பேசி வாதி ஆறுமுகத்திற்கு கேவலத்தையும், அவமானத்தையும் ஏற்படுத்தியதாகவும், 3ம் எதிரி வாதி ஆறுமுகத்தை கையால் இடது நெஞ்சு, இடது கை ஆகிய இடங்களில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், 1 முதல் 3 எதிரிகள் வாதி ஆறுமுகத்தை பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் செய்ததாகவும், 3ம் எதிரி வாதி ஆறுமுகம் கையிலிருந்த ரெட்மி செல்போனை பிடுங்கி திருடியதாகவும், 1 முதல் 3 எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக மலையம்பாளையம் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>வழக்கை புலன் கொண்டு எதிரிகளை அழைத்தல்</u>**:

மேற்படி இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் ஆய்வு செய்து இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழ் புலன் கொள்ளக் கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் எதிரிகளுக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

3. **<u>குற்றச்சாட்டுக்கள் மற்றும் எதிரிகளின் கோரிக்கை</u>**:

எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பதற்கான முதல் தோற்ற வழக்கு இருந்ததால் கு.வி.மு.ச பிரிவு 240(2)ன் கீழ் 1, 2 எதிரிகள்மீது இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 506(i)ன் கீழும், 3ம் எதிரிமீது இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வழக்கை மேல் தொடர விளக்கிக்கேட்டபோது தாங்கள் குற்றவாளி இல்லை என கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டது. **(வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1ம் எதிரி இறந்துவிட்டதால் 1ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டது).**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:13:46 +0530

4. <u>**வழக்கு விசாரணை**</u>:

அரசு தரப்பில் குறிப்பிட்டிருந்த பட்டியல் சாட்சிகளில் பட்டியல் சாட்சிகள் 1, 5, 7 ஆகிய 3 நபர்கள் தவிர்த்து அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>**அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்**</u>:–

(i) **அ.சா.1 பெரியசாமி தனது சாட்சியத்தில்** சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஆறுமுகம் என்பவர் அவரது தோட்டத்தில் வேலை செய்வதற்காக தன்னை அழைத்து சென்று தன்னை மட்டைகளை சேகரிக்க சொல்லியிருந்தார் என்றும், அப்போது அங்கு வந்த பெயர் தெரியாது ஒரு நபர் அங்கு வந்து தங்கள் அனைவரையும் தோட்டத்தை விட்டு வெளியே செல்ல கூறினார் என்றும், அதற்கு ஆறுமுகம் இது தான் வாங்கிய தோட்டம் நீங்கள் யாரும் வெளியே செல்ல தேவையில்லை என்று கூறினார் என்றும், மேற்படி பெயர் தெரியாத நபர் ஆறுமுகத்தை மிரட்டி கொண்டிருந்தார் என்றும், இருதரப்பினருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும், தான் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**(ii) அ.சா.2 அருள் (எ) அருள்செல்வம் தனது சாட்சியத்தில்** 09.09.2020ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு மேல் ஆறுமுகம் என்பவர் வேலைக்காக தங்களை அழைத்து சென்றதாகவும், ஆறுமுகம் இடத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் அங்கு வந்து ஏற்கனவே தங்களுக்கும் ஆறுமுகத்திற்கும் இடப்பிரச்னை இருப்பதாகவும், தாங்கள் ஆறுமுகத்திடம் பேசிக் கொள்வதாகவும், சிறிது நேரத்திற்கு பிறகு ஆறுமுகமும், எதிரிகளும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், தாங்கள் கிளம்பி வந்துவிட்டதாகவும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:13:51 +0530

**(iii) அ.சா.3 முருகேசன் தனது சாட்சியத்தில்** 09.09.2020ம் தேதி மாலை 05.30 மணிக்கு பாலக்காடு என்ற இடத்தில் தோட்டத்தில் நடந்த பிரச்சனை சம்மந்தமாக போலீசார் மேப் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், போலீசார் தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், தான் கையெழுத்து செய்ததாகவும், தன்னுடன் பெரியசாமி என்பவரும் கையெழுத்து செய்தார் என்று, **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iv) **அ.சா.4 கௌரிசங்கள் தனது சாட்சியத்தில்** அ.சா.1 ஆறுமுகத்தை தெரியாது என்றும், எதிரிகளை தெரியாது என்றும், 09.09.2020ம் தேதி பெரியசாமி என்பவர் தன்னை கணபதிபாளையத்திற்கு டிராக்டரில் உழவு ஓட்டுவதற்கு அழைத்தார் என்றும், தானும், தன்னுடன் ஒருவரும் கணபதிபாளையம் அருகில் உள்ள ஊருக்கு டிராக்டரில் உழவு ஓட்டுவதற்கு சென்று கொண்டிருந்தபோது காலை நேர வாக்கில் காட்டுக்காரர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டார்கள் என்றும், தன்னை டிராக்டர் ஓட்டக்கூடாது என்று சொன்னார்கள் என்றும், தான் வண்டியை எடுத்துக் கொண்டு வந்துவிட்டதாகவும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(v) **அ.சா.5 வரதராஜன், காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 09.09.2020ம் தேதி தான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.2 புகாரை** பெற்று மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.369/2020 இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(i) & 379 ன் படி **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெரியசாமி மற்றும் முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.4 பார்வை மகஜர்** மற்றும் **அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்** தயார் செய்ததாகவும், சாட்சிகள் ஆறுமுகம், பெரியசாமி, அருள்செல்வம், கௌரிசங்கர், பெரியசாமி, முருகேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 20.09.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட வாதி ஆறுமுகத்திற்கு சிகிச்சை அளித்த கொடுமுடி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் லட்சுமிநாத்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:13:55 +0530

என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.6 காயச்சான்று** பெற்றதாகவும், 03.07.2021ம் தேதி இவ்வழக்கின் எதிரி பொன்னுசாமி என்பவருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பின்படி 04.07.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜராகி மேற்படி எதிரி பொன்னுசாமி ஆஜர் செய்த **அ.சா.பொ.1 MI கம்பெனி செல்போன் ஒன்றை அ.சா.ஆ.7 படிவம் 91** தயார் செய்து கைப்பற்றி எதிரி பொன்னுசாமியிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான MI கம்பெனி செல்போன் ஒன்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்ததாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள்மீது இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(i) மற்றும் 379 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டது.

6. <u>எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவல்</u>:

அரசு தரப்பு சாட்சிகளின் மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் மற்றும் குற்ற விபரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் வழக்கை பொய் வழக்கு என்றும், பொய் சாட்சி என்றும் கூறினார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார்கள் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இருப்பின் எதிரிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை எவ்வளவு என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி ஆகும்.

8. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>:–

அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார்கள் என்பதை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:13:59 +0530

அ.சா.5ன் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், முன் விரோதம் காரணமாக எதிரிகள்மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் புகார்தாரான ஆறுமுகம் இறந்துவிட்டதால் ஆறுமுகம் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கவில்லை என்றும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால் எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி ஆறுமுகத்திற்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்த நிலையில் 09.09.2020ம் தேதி காலை 09.00 மணிக்கு வாதி ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான குமாரசாமிபுரம் தோட்டத்தில் வாதி ஆறுமுகம் சாட்சி 4 கௌரிசங்கர் என்பவருடன் டிராக்டரில் உழவு ஓட்டச் சென்றபோது 1 முதல் 3 எதிரிகள் உழவு ஓட்ட விடாமல் சட்ட விரோதமாக தடுத்து வாதியை பார்த்து ஏன்டா தாயோலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி, 3ம் எதிரி வாதி ஆறுமுகத்தை கையால் இடது நெஞ்சு, இடது கை ஆகிய இடங்களில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தி, 1 முதல் 3 எதிரிகள் வாதி ஆறுமுகத்தை பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் செய்தும், 3ம் எதிரி வாதி ஆறுமுகம் கையிலிருந்த ரெட்மி செல்போனை பிடுங்கி திருடிச் சென்றாரா என்பதை அ.சா.5ன் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மூலமாகவும் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கவேண்டியுள்ளது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:02 +0530

11. வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான ஆறுமுகம் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இறந்துவிட்டதால் அவரை அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கவில்லை. இவ்வழக்கில் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக தான் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

12. வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான ஆறுமுகம் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்காத நிலையிலும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 மற்றும் வழக்கை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் படியான குற்றங்களுக்கு உண்டான உட்கூறுகள் எதுவும் நிறைவேற்றியிருப்பதாக அரசு தரப்பில் போதுமான சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. எதிரிகள் மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டியது அரசு தரப்பின் பொறுப்பாகும். இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகள் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

**முடிவாக**, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, இவ்வழக்கில் 2ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 506(i)ன் கீழும், 3ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(i), 379ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து 2,3 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:06 +0530

எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. **(வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1ம் எதிரி இறந்துவிட்டதால் 1ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய்விட்டது)**

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான MI கம்பெனி செல்போன் ஒன்று அ.சா.பொ.1 நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.171/2021 என்ற எண்ணில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி நடக்கவும், மேல்முறையீடு இல்லை எனில் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கு.வி.மு.ச.பிரிவு 452ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

<u>**அரசு தரப்பு சாட்சிகள்**</u>:-

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.பெரியசாமி |
| அ.சா.2 | திரு.அருள் (எ) அருள்செல்வம் |
| அ.சா.3 | திரு.முருகேசன் |
| அ.சா.4 | திரு.கௌரிசங்கர் |
| அ.சா.5 | திரு.வரதராஜன் - காவல் உதவி ஆய்வாளர் |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:13 +0530

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.09.2020 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | 09.09.2020 | புகார் |
| அ.சா.ஆ.3 | 09.09.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 09.09.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 09.09.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 16.09.2020 | காயச் சான்று |
| அ.சா.ஆ.7 | 04.07.2021 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**:–

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | MI கம்பெனி செல்போன் ஒன்று |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–** – இல்லை –

**குறிப்பு**

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**C.C.No.1/2022**

| S.No | FORM ANNEXURE UNDER RULE 106 OF CRIMINAL RULE OF PRACTICE **Description of Accused** | |
|---|---|---|
| 1 | Name of the Police Station and the Crime Number of the Offence | The Sub Inspector of Police, Malayampalayam Police Station, Crime No.369/2020 Under Section 341, 294(b), 323, 506(i), 379 of IPC |
| 2 | Name | A1 – Ponnusamy (Died)<br>A2 – Kasthuri<br>A3 - Dhanavel |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:20 +0530

| | | |
|---|---|---|
| 3 | Father's Name | A1 – Nallappa gounder<br>A2 – W/o. Ponnusamy<br>A3 - Ponnusamy |
| 4 | Occupation | -- |
| 5 | Residence | A1, A2 – 50 Uthandipalayam, Erode Dt.<br>A3 - 50 Uthandipalayam, Punjai Kalamangalam, Erode Dt. |
| 6 | Age | A1 – 67/2020<br>A2 - 56/2020<br>A3 - 41/2020 |
| 7 | Date of Occurrence | 09.09.2020 |
| 8 | Date of Complaint | 09.09.2020 |
| 9 | Date of Apprehension | Nil |
| 10 | Date of Release on bail | A2, A3 Anticipatory Bail on 07.11.2020<br>A1 Anticipatory Bail on 02.08.2021 |
| 11 | Date of Commitment | -- |
| 12 | Date of Commencement of trial | 04.04.2022 |
| 13 | Date of Closure of trial | 08.06.2026 |
| 14 | Date of Sentence or Order | 19.06.2026 |
| 15 | Date of Service of copy of Judgment or finding on Accused | Acquitted |
| 16 | Explanation of delay | No Delay |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.19 11:14:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.